இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஏ) சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம் தொகுதிகளில் சூறாவளியால் வாழைப் பயிர்கள் பாதிக்கப்பட்டமைக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட பல ஊர்களில் வெள்ளச் சேதம் ஏற்பட்டு, கல்லிடைக்குறிச்சி, கரம்பை, வீரவநல்லூர், வெள்ளங்குழி, அத்தாலநல்லூர், திருப்புடைமருதூர், அரிகேசவநல்லூர், கிரியம்மாள்புரம், கூனியூர் போன்ற ஊர்களில் சூறாவளிக் காற்று, மழையால் மிகப் பெரிய சேதம் ஏற்பட்டு, வாழைகள் எல்லாம் அழிந்துவிட்டன. 24–2–2009 அன்று ஏற்கெனவே இந்த அவையிலே, நான் இந்தப் பிரச்சினையைக் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தேன். அன்றைக்கு அமைச்சர் இல்லாத காரணத்தினால், மீண்டும் இந்தக் கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சேதம் ஏற்பட்டு, அரசினுடைய கவனத்திற்கு வந்து, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக, கிட்டத்தட்ட 15 இலட்சம் வாழைகள் சேதமடைந்துள்ளதாகத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை நஷ்ட ஈடு எதுவும் தரப்படவில்லை. அந்த மக்கள் ஏற்கெனவே, கெனடியன் கால்வாய்ப் பாசனத்திலே நெல் விவசாயம் செய்யக்கூடிய இடத்திலேதான் வாழை போட்டிருந்தார்கள். ஆனால், கடந்த வருடம் மார்ச் மாதம் ஏற்பட்ட மிகப் பெரிய வெள்ளச் சேதத்திலே நெற்பயிர்கள் எல்லாம் நஷ்டம் அடைந்தபோது, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே நேரடியாக வந்து பார்த்து, எக்டேருக்கு 4,000 ரூபாய் என்று இருந்த நஷ்ட ஈட்டை 7,500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள். ஆனால், இப்போது வாழை என்பது ஓராண்டுப் பயிர். அதனாலே ரூ.7,500 கொடுத்தால்கூட போதாது. நிச்சயமாக 15,000 ரூபாயாக நஷ்ட ஈடு தர வேண்டும். அதுவும் நமது அரசு வந்த பிறகு, நஷ்ட ஈடு என்று மக்கள் கேட்டு, இல்லையென்று சொன்னதே கிடையாது. எந்தப் பகுதி விவசாயிகளாக இருந்தாலும் சரி, வேறெந்த நஷ்ட ஈடாக இருந்தாலும் சரி, அரசுக்கு

2009 பிப்ரவரி 26] [திரு. பா. வேல்துரை]

அதை எடுத்துச் சொல்கிறபோது, இதுவரை நம்முடைய முதல்வர் அவர்கள் நஷ்ட ஈட்டை முறையாக வழங்கி வந்திருக்கிறார்கள். எனவே, இந்த விவசாயிகளைக் காப்பாற்றவில்லையென்று சொன்னால், இது ஏழை விவசாயிகளுக்கு மிகப் பெரிய கொடுமையான விஷயமாகப் போய்விடும். அதுவும் குறிப்பாக, நான்கூட அன்றைக்கு ஒரு விவசாயியைப் பார்த்துக் கேட்டேன். அந்த விவசாயி சொன்னார். *(மணியடிக்கப்பெற்றது)* "என்னுடைய பிள்ளை கல்யாணமே நின்றுபோய்விட்டது" என்று சொன்னார். அதாவது, "இந்த வருடம் வாழையை வெட்டி என் பிள்ளை கல்யாணத்தை முடிக்கலாம் என்று இருந்தால், இந்த வருடம் கல்யாணமே முடிக்க முடியாமல் நின்றுபோய்விட்டது" என்று சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்துரை, அமைச்சருடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொன்னால் போதும்.

திரு. பா. வேல்துரை: எனவே, தயவுகூர்ந்து நீங்கள் அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மான அடிப்படையில், சேரன்மகாதேவி தொகுதி மற்றும் அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், வெள்ளங்குறிச்சி, அத்தாலநல்லூர், திருப்புடைமருதூர், அரிகேசவநல்லூர், கிரியம்மாள்புரம், கூனியூர், காருக்குறிச்சி, சேரன்மகாதேவி மற்றும் பல கிராமங்களில் 9–10–2008 அன்று வீசிய சூறாவளிக் காற்றினால் வாழைப் பயிர்கள் சேதமடைந்துள்ளன. மொத்தம் 290 எக்டேர் வாழைப் பயிர் சாகுபடிப் பரப்பு பாதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 1,355 விவசாயிகள். இதற்காக நஷ்ட ஈடு வழங்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து பரிந்துரை வந்துள்ளது. அதற்கான நஷ்ட ஈடாக 11,60,000 ரூபாய் நிவாரணம் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் 24–2–2009 அன்று அரசுக்குக் கடிதம் அனுப்பியிருக்கின்றார். பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.11,60,000 நஷ்ட ஈடு என்று சொல்லியிருக்கிறீர்கள். கோடிக்கணக்கான அளவிலே நஷ்டம் வந்திருக்கிறது. நீங்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்து முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடும்—இடர் இழப்புக்கு அவர்கள் பொறுப்பாக இருக்கிறார்கள்—நீங்கள் எல்லாம் கலந்து பேசி நல்ல தொகையை அந்த மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

(ஐ) வலங்கைமான் தொகுதி, செண்பகபுரத்தில் மின்சாரம் தாக்கி இறந்த மாணவன் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை கன மழை பெய்தபோது, மின்சாரம் தாக்கப்பட்டு, தஞ்சை மாவட்டம், வலங்கைமான் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த செண்பகபுரம் பகுதியில் வசிக்கும் ஜெயக்குமார் என்ற கல்லூரி மாணவன் இறந்து விட்டார். புல் அறுக்கத் தன் வயலுக்குச் சென்றபோது, கடந்த கன மழையில் அறுந்து விழுந்த மின்சாரக் கம்பியை மிதித்து இறந்துவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'மழையின்போது இறந்த மக்களுக்கு நிவாரண நிதி வழங்கப்படும்' என்று அறிவித்தார்கள். அந்த மாணவரின் குடும்பத்திற்கு அந்த நிவாரண நிதி கிடைக்கச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அங்கு மின்சார ஒயர் அறுந்து, கிட்டத்தட்ட 10, 15 நாட்களுக்கு மேல் குடிநீர் இல்லாமல் பாதிக்கப்பட்டு, அந்தக் கிராமமே இருளில் சூழ்ந்திருந்தது. அந்தச் சமயம்தான் அந்த மாணவன் இறந்தான். எனவே, அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் கிடைக்க உதவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.